வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 07 | 31.01.2026 சனிக்கிழமை | இதழ் : 31 | பக்கங்கள் : 08

## டித்வா பேரிடரால் பாதிப்பு வர்த்தகர்களுக்கு நிவாரணம்

### புதிய சுற்றுநிருபம் வெளியீடு

கொழும்பு, ஜன. 31

டித்வா சூறாவளி ஏற்படுத்திய பாதிப்புகளால் முடங்கியுள்ள வர்த்தகர்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பான புதிய சுற்றுநிருபத்தை பாதுகாப்பு அமைச்சு வெளி யிட்டுள்ளது.

இதன் மூலம், 2026.01.22 அன்று வெளியிடப்பட்ட வரவு செலவுத் திட்ட சுற்றுநிருப இலக்கம் 08/2025(iii) இன் கீழ் முன்மொழியப்பட்ட, "அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களை வலுவூட்டும்

07

## பெருந்தோட்ட தொழிலாளர்களின்

# நாளாந்த சம்பளம் ரூ. 1,750; ஒப்பந்தம் நேற்று கைச்சாத்து

கொழும்பு, ஜன. 31

பெருந்தோட்ட தொழிலாளர்களின் நாளாந்த ஊதி யத்தை ஆயிரத்து 750 ரூபா யாக அதிகரிப்பது தொடர்பான ஒப்பந்தம் நேற்று கைச்சாத்தானது.

பெருந்தோட்டங்கள் மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்தானது.

அமைச்சின் செயலாளர் பிரபாத் சந்திரகீர்த்தி, சம்பள நிர்ணய சபையின் அதிகாரிகள் உள்ளிட்டோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

2026ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டத்தை சமர்ப்பிக்கும் போது, ஜனாதிபதியினால் பெருந்தோட்டத்

07




## தையிட்டி விகாரைக்கு எதிராக இன்றும் நாளையும் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 31

தையிட்டி திஸ்ஸ விகாரையை அகற்றுமாறு கோரியும் அதனை சுற்றியுள்ள காணிகளை விடுவிக்குமாறும் இன்றும் நாளையும் விகாரைக்கு அருகாக போராட்டம் நடைபெறவுள்ளது.

இன்று மாலை 4 மணி முதல் மாலை 6 மணி வரையும், பௌர்ணமி நாளான நாளை காலை

07

## புதிய பயங்கரவாத சட்டத்துக்கு எதிராக கொழும்பில் போராட்டம்




கொழும்பு, ஜன. 31

பயங்கரவாத தடுப்பு சட்டம் மற்றும் புதிதாக முன்மொழியப்பட்டுள்ள நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் ஆகியவற்றை உடனடியாக மீளப் பெறக்கோரி கொழும்பில் உள்ள நீதி அமைச்சின் முன்பாக நேற்று போராட்டம் நடத்தப்பட்டது.

07

## மாற்று கருத்து இல்லாத சமூகத்தை உருவாக்குவதற்கு அரசாங்கம் முயற்சி

### பொதுஜன பெரமுன கட்சி

கொழும்பு, ஜன. 31

மாற்றுக் கருத்துடைய அரசியல் பிரிவினரே இல்லாத ஒரு சமூகத்தை உருவாக்க அரசாங்கம் முயற்சிக்கிறது என்று சிறீ லங்கா பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.

அந்தக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சஞ்சீவ எதிரிமன்ன நேற்றைய தினம் கட்சியின் தலைமை பணிமனையில் நடத்திய ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

07

## 3 மாதங்களில் 82,671 பேர் கைது

கொழும்பு, ஜன. 31

"முழுநாடும் ஒன்றாக" போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கையில் இதுவரை 82 ஆயிரத்து 671 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

07

## 'டித்வா'வால் பாதிக்கப்பட்ட 97.5 வீதமானோருக்கு இழப்பீடு

கொழும்பு, ஜன. 31

டித்வா சூறாவளியால் பாதிக்கப்பட்ட 97.5 சதவீதமான மக்களுக்கு கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது என்று பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சின் செயலாளர் ஆலோக பண்டார தெரிவித்துள்ளார்.

பேரிடரின்போது வீடுகளை துப்புரவு செய்வதற்கு 25 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு வழங்க 4 இலட்சத்து 34 ஆயிரத்து 375 வீடுகள் அடையாளம் காணப்பட்டன. இதில், தற்போதுவரை 97.5 சதவீத பணிகள் நிறைவடைந்தன. 4 இலட்சத்து

07

## இலங்கையின் சுதந்திர தினத்தை கரிநாளாக பிரகடனப்படுத்தி வட, கிழக்கில் போராட்டங்கள்

### யாழ். பல்கலை மாணவர் ஒன்றியம்

வவுனியா, ஜன. 31

இலங்கையின் சுதந்திர தினமான எதிர்வரும் பெப்ரவரி 4ஆம் நாளை தமிழருக்கு கறுப்பு தினமாக பிரகடனப்படுத்தி வடக்கு, கிழக்கு தழுவிய மாபெரும் போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாக யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

07

## சங்கானை படை முகாமை அகற்றுமாறு கோரிக்கை!

### ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் பவானந்தராஜா எம். பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 31

சங்கானையில் அமைந்துள்ள இராணுவ முகாமை அகற்றி, அந்தக் காணியை மக்களிடம் கையளிக்குமாறு இராணுவத்தினரிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சிறீ பவானந்தராஜா தெரிவித்துள்ளார்.

வலி. மேற்கு பிரதேச ஒருங்கிணைப்பு குழு

07

## "தமிழ் தேசிய அரசியலை வேரிலேயே அழிக்கக்கூடியது பிரஜா சக்தி திட்டம்"

கொழும்பு, ஜன. 31

"பிராஜா சக்தி எனும் திட்டம் தமிழ் தேசிய அரசியலை வேரிலேயே அழிக்கக்கூடிய ஆபத்தானது", என்று அரசியல் ஆய்வாளரும் சமூக விஞ்ஞான ஆய்வு மைய இயக்குநருமான சி. அ. யோதிலிங்கம் தெரிவித்துள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியாளர்கள் அடிமட்ட மக்கள் மத்தியில் பணியாற்றுவதற்காக பிரஜா சக்தி என்கிற அமைப்பை உருவாக்கியுள்ளனர். அந்த அமைப்பின் ஊடாக வறுமை ஒழிப்பு திட்டத்தை

07

## போக்குவரத்து சேவை சாரதிகளில் 60 வீதத்தினர் போதைக்கு அடிமை!

### நெடுஞ்சாலைகள் அமைச்சர் தகவல்

கொழும்பு, ஜன. 31

பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் சாரதிகளில் 60 வீதமானோர் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ளனர் என்று நெடுஞ்சாலைகள், நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டி மாவட்டத்தில் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி தொடர்பான விசேட அபிவிருத்தி குழு கூட்டத்தில்

07

## கணக்காய்வாளர் நாயகம் பதவிக்கு புதியவர் பரிந்துரை

கொழும்பு, ஜன. 31

தற்போது வெற்றிடமாக உள்ள கணக்காய்வாளர் நாயகம் பதவிக்காக ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவால் மற்றுமொரு பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இன்றைய தினம் கூடும் அரசமைப்பு பேரவை இது தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கும் என்று போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர் 4 சந்தர்ப்பங்களில் ஜனாதிபதியால் கணக்காய்வாளர் நாயகம்

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரஜா சக்திக்கு சுழிபுரம் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் நீக்கம்!

## சங்கானை ஒருங்கிணைப்பு கூட்டத்தில் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜன. 31

சுழிபுரம் காட்டுப்புலத்தில் ஏற்கனவே பிரஜா சக்தி அமைப்புக்கு தெரிவானவர்களை நீக்கிவிட்டு தேசிய மக்கள் சக்தி கட்சியினர் புதியவர்களை நியமித்துள்ளனர் என்று வலி. மேற்கு பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

நேற்றைய தினம் சங்கானை பிரதேச செயலகத்தில் ஒருங்கிணைப்பு குழு கூட்டம் சிறீ பவானந்தராஜா எம். பி. தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் பங்கேற்ற சமூக மட்ட அமைப்பை சேர்ந்த ஒருவரே இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அவர் கருத்துரைத்தபோது, "இவ்வாறு மாற்றம் செய்யுமாறு நீங்களே (சிறீபவானந்தராஜா) கூறினீர்கள் என்றே எமக்கு தகவல் கிடைத்துள்ளது. எங்களின் பிரச்னைகளை கூறினால் தீர்ப்பதாகத்தான் ஆரம்பத்தில் கூறினீர்கள். அதனால் தான் இங்கே கூறுகிறோம். காட்டுப் புலத்தில் மூன்றுபேர் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட நிலையில் அவர்களை நீக்கி விட்டு புதிதாக மூவரை தெரிவு செய்துள்ளீர்கள். மக்கள் பிரச்னைகளும், கிராமத்தில் உள்ள பிரச்னைகளும் தெரியாதவர்களை நியமித்துள்ளீர்கள். இவ்வாறு இருக்கையில் அவர்கள் எவ்வாறு மக்களின் பிரச்னைகளை உங்களுக்கு தெரியப்படுத்துவார்கள்? இதற்கு தீர்வு வழங்க வேண்டும் - என்றார்.

இதற்கு பதிலளித்த சிறீபவானந்தராஜா,

இது நாடளாவிய ரீதியில் உள்ள பிரச்னை. இதனை ஒரு கடிதம் மூலமாக எமக்கு தெரியப்படுத்துங்கள் நாம்நடவடிக்கை எடுக்கிறோம். இது ஜனாதிபதியால் கொண்டுவரப்பட்ட நடவடிக்கை. எனவே, மக்களால்முன்வைக்கப்படும் குறைபாடுகளை அடுத்து வரவிருக்கின்ற மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் முன்வைத்து சரியான நடவடிக்கை எடுப்போம் - என்றார். (ஐ-05)

# நல்லூர் கூட்டுறவு சங்கத்தினர் நேற்று பணிப்புறக்கணிப்பு!

யாழ்ப்பாணம், ஜன. 31

நல்லூர் பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் பணிமனை மற்றும் கிளைகளின் ஊழியர்கள் நேற்று வெள்ளிக்கிழமை பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நல்லூர் பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் புதிய பொது முகாமையாளர் நியமனத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த சங்கத்தின் புதிய பொது முகாமையாளராக நியமிக்கப்படவுள்ளவர் மோசடி குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடையவர் என்றும் அவ்வாறான ஒருவரை நியமிப்பதற்கு எதிர்ப்பை பதிவு செய்யும்முகமாகவே பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை முன்னெடுத்ததாக ஊழியர்கள் தெரிவித்தனர். (ஐ)

# தென்னிந்திய திரையிசை பாடகர்கள் யாழ். வந்தனர்

யாழ்ப்பாணம், ஜன. 31

தென்னிந்தியாவின் பிரபல திரையிசை பாடகர்களான உன்னிகிருஷ்ணன், அநுராதா சிறீராம் ஆகியோர் நேற்று யாழ்ப்பாணம் வந்தனர்.

பலாலி விமான நிலையம் ஊடாக யாழ்ப்பாணத்துக்கு வந்த அவர்கள் மலர் மாலை அணிவித்து, பொன்னாடை போர்த்தி வரவேற்கப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள நிகழ்வு ஒன்றில் பங்கேற்பதற்காகவே அவர்கள் வருகை தந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-05)

# காந்தியின் சிரார்த்த தினம் யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 31

இந்தியாவின் தேசபிதா மகாத்மா காந்தியின் 78ஆவது சிரார்த்த தினம் நேற்று வெள்ளிக்கிழமை யாழ்பாணத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் இந்திய துணை தூதரகத்தின் ஏற்பாட்டில் நடந்த இந்த நிகழ்வு யாழ். போதனா மருத்துவமனை முன்பாக உள்ள மகாத்மா காந்தியின் திருவுருவச் சிலை முன்பாக நடைபெற்றது.

வாழ்நாள் பேராசிரியர் எஸ். மோகனதாஸின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில்

இந்திய துணை தூதுவர் சாய் முரளி காந்தியின் சிலைக்கு மலர் மாலை அணிவித்து அக வணக்கம் செலுத்தினார்.

இந்த நிகழ்வில், வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன், யாழ். போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி, கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் ச. லலீசன், மறவன்புலவு சச்சிதானந்தம், காந்தி சேவா நிலைய அங்கத்தவர்கள், யாழ்ப்பாணம் இந்திய துணை தூதரக அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டனர்.

இதில், காந்தி சேவா நிலையத்தால் காந்தீயம் பத்திரிகை வெளியிடப்பட்டது. இந்த பத்திரிகையை வடமாகாண ஆளுநர் வெளியிட்டு வைத்தார்.

(ஐ)

# கல்வி மறுசீரமைப்பு குழுவில் யாழ். பல்கலை. துணைவேந்தர்

யாழ்ப்பாணம், ஜன. 31

தரம் 6இற்கு அறிமுகப்படுத்தப்பட்டு பிற்போடப்பட்டுள்ள புதிய பாடத்திட்டம் (கல்வி மறுசீரமைப்பு) குறித்த சாத்தியப்பாடுகளை ஆராய்ந்து அதனை செயல்படுத்துவதற்கு பொருத்தமான திட்ட முன்வரைவை முன்மொழியும் நிபுணர் குழுவில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறீசற்குணராஜா உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரதமரும், கல்வி அமைச்சருமான ஹரிணி அமரசூரியவின் வழிகாட்டலின்படி இந்த நிபுணர் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த நிபுணர் குழுவை தெரிவது தொடர்பாக கடந்த 27ஆம் திகதி கல்வி அமைச்சில் கூட்டம் நடைபெற்றிருந்தது. இதில், பிரதமரின் ஆலோசனையின்படி, தேசிய கல்வி நிறுவகத்தின் கல்வி விவகாரங்கள் சபை தலைவர் பேராசிரியர் பிரியங்கனி சேனநாயக்க தலைமையில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா, தேசிய கல்வி நிறுவகத்தின் கல்வி விவகாரங்கள் சபையின் முன்னாள் தலைவர் கலாநிதி உபாலி மாம்பிட்டிய, முன்னாள் உறுப்பினரும், கொழும்பு பல்கலைக்கழக சமூகவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளருமான பேராசிரியர் மொஹமட் மஹீஸ் மற்றும் தேசிய கல்வி நிறுவகத்தின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் ரஞ்சித் பத்மசிறி ஆகியோர் இந்தக் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் குழுவின் முதலாவது கூட்டம் எதிர்வரும் பெப்ரவரி 03ஆம் திகதி தேசிய கல்வி நிறுவகத்தின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஞானச்சுடர் மலர் வெளியீடும் உதவிகள் வழங்கல் நிகழ்வும்

வடமராட்சி, ஜன. 31

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தின் சைவ, கலை, பண்பாட்டு பேரவையின் ஏற்பாட்டில் ஞானச்சுடர் மாத சஞ்சிகையின் 337ஆவது மலர் வெளியீட்டு விழா நேற்று நடைபெற்றது.

வெளியீட்டுரையை ஓய்வு பெற்ற பிரதி கல்வி பணிப்பாளர் சு. தேவமனோகரன், மதிப்பீட்டுரையை கல்வியியல் கல்லூரி முதுநிலை விரிவுரையாளர் பா. தனபாலன் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வை தொடர்ந்து கம்பர்மலை வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவன் ஒருவருக்கு சைக்கிள் வழங்கி வைக்கப்பட்டது. அத்துடன், பதுளை டயபரா தமிழ் மகா வித்தியாலயம், பண்டாரவளை தமிழ் மத்திய கல்லூரிகளின் சாதாரணதர மாணவர்களுக்கு பயிற்சி வினாத்தாள்களுக்காக 20 ஆயிரம் ரூபாய் அன்பளிக்கப்பட்டது. (ஐ-02-08)

# குடும்பஸ்தர் படுகொலை; சந்தேகநபர் ஒருவர் கைது

முல்லைத்தீவு, ஜன. 31

ஒட்டுசுட்டானில் குடும்பஸ்தர் ஒருவர் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் - கரடிப்புலவு கிராமத்தில் கடந்த 27ஆம் திகதி ஒருவர் தலையின் பின்புறத்தில் காயத்துடன் சடலமாக மீட்கப்பட்டார். அதே இடத்தைச் சேர்ந்த நாகையா நாகராஜா (வயது 41) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

குடும்பத்தை விட்டு பிரிந்திருந்த குறித்த நபர் இரவு உணவு வாங்குவதற்காக சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோதே தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார் என்று கூறப்படுகிறது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் கொலையானவரின் மைத்துநரே கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் கொலையை தானே செய்தார் என்று ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார் என்றும் மேல திக விசாரணைகள் தொடர்கின்றன எனவும் ஒட்டுசுட்டான் பொலிஸார் தெரிவித்தனர்.

(ஐ)

# வட்டு. இந்து கல்லூரியில் நேற்று வீதியோட்ட நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜன. 31

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் வீதி ஓட்ட நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது. கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மை போட்டியை ஒட்டியே இந்த நிகழ்வு நடைபெற்றது.

ஆண்களுக்கான வீதி ஓட்டம் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் இருந்து ஆரம்பமாகி மாவடி சந்தி - மூளாய் சந்தி - சுழிபுரம் சந்தி -சித்தங்கேணி சந்தி ஊடாக மீண்டும் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியை வந்தடைந்தது. இதில், ஈ. தர்சிகன் முதலாம் இடத்தைப் பெற்றார்.

பெண்களுக்கான வீதியோட்டம் சுழிபுரம் விக்ரோறியா கல்லூரியில் இருந்து ஆரம்பமாகி சித்தங்கேணி சந்தி ஊடாக வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியை வந்தடைந்தது. இதில், கே.கேசவி முதலாம் இடத்தையும் பெற்றுக் கொண்டார்.

வீதியோட்ட நிறைவில் வெற்றியீட்டிய வீர, வீராங்கனைகளுக்கான பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

கல்லூரியின் அதிபர் சி. தனஞ்சயன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ். உடற்கல்வி ஆசிரியர் சங்க தலைவர் ப. தர்மகுமாரன் கலந்து கொண்டார். அத்துடன், இந்த நிகழ்வில் பாடசாலை சமூகத்தினர், பழைய மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(ஐ-05)

# தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல் மறுக்கும் சம்பவங்கள் அதிகரிப்பு

கொழும்பு, ஜன. 31

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் அரச நிறுவனங்கள, தகவல் வழங்க மறுக்கும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன என்ற தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில், அதில் குறிப்பிடத்தக்க உயர்வு எதுவும் இல்லை என தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் கே.டி.எஸ். ருவன்சந்திர, தகவல் கோரிக்கைகளை அரசுத் துறைகள் மறுக்கும் நிலை முன்பிருந்தே காணப்பட்ட ஒன்றே தவிர புதிதாக உருவான போக்கு அல்ல என்றும், அண்மைக் காலத்தில் அதில் மாற்றம் எதுவும் பதிவாகவில்லை என்றும் கூறினார்.

ஆணைக்குழுவுக்கு கிடைக்கும் முறையீடுகளின் எண்ணிக்கையும் ஆண்டு தோறும் பெரிதாக மாறாமல் இருப்பதாகவும், 2025 ஆம் ஆண்டில் சுமார் 1,700 முறையீடுகள் கிடைத்துள்ளன என்றும், இது வருடாந்த சராசரி அளவாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

2016 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட தகவல் அறியும் உரிமைச் சட்டம், வரையறுக்கப்பட்ட சில விதிவிலக்குகளைத் தவிர, அரச துறைகள் வைத்திருக்கும் தகவல்களைப் பெறும் உரிமையை குடிமக்களுக்கு வழங்குகிறது. இந்தச் சட்டத்தின் கீழ் முறையீடுகளை விசாரித்து, சட்டம் கடைப்பிடிக்கப்படுகிறதா என்பதை உறுதி செய்யும் சுயாதீன அமைப்பாக தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு செயல்படுகிறது.

இந்நிலையில், ஜனாதிபதி செயலகம் உட்பட சில நிறுவனங்கள் தகவல் வழங்க மறுத்துள்ளதாக வெளியான தகவல்கள் குறித்து கவலைகள் எழுந்துள்ளன. சில சந்தர்ப்பங்களில் தேசிய பாதுகாப்பு உள்ளிட்ட விடயங்களை உள்ளடக்கும் சட்டத்தின் 5 ஆம் பிரிவு காரணமாகக் குறிப்பிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
31.01.2026 சனிக்கிழமை
விசுவாவசு வருடம், தை 17

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## மக்கள் இல்லாத போராட்டங்கள்

வடக்கு, கிழக்கில் போராட்டங்கள் என்று அறிவிப்பு வந்துவிட்டால் கூடவே ஒரு கேள்வியும் எழுவது உண்டு. இந்தப் போராட்டத்திலாவது மக்கள் பெருந்திரளாகப் பங்குகொள்வார்களா? தையிட்டியில் சில எண்ணிக்கையானவர்கள் அதிலும் ஒரே முகங்களே தெரிகின்றனர். சிலவேளைகளில் போராட்டங்கள் இடம்பெறப் போவதாகக் கூறப்படும் இடங்களில் அதனைக் கண்காணிப்பதற்காக அனுப்பப்படும் பொலிஸார் அதிகமாக இருக்கின்றனர்.

யுத்தத்துக்குப் பின்னரான காலப்பகுதியில் ஆரம்பத்தில் குறிப்பிட்டளவு மக்கள் ஈடுபாடு தெரிந்தது. ஆனால், இப்போது அந்த நிலைமை பெருமளவு மாறிவிட்டது. பல்கலைக்கழக மாணவர்கள் என்னும் பெயரில் அறிக்கைகளும் ஊடக சந்திப்புகளும் காட்சிப்படுத்தப்படுமளவுக்கு பல்கலைக்கழக மாணவர்கள் அனைவருமாக பங்குகொள்கிறார்களா என்றால் அதிலும் தலைகுனிவுதான். ஏன் இந்த நிலைமை? ஏன் மக்கள் அரசியல்வாதிகளின் அறிவிப்புகளை கண்டுகொள்வதில்லை?

இந்தக் கேள்விக்கு இப்படியும் ஒரு பதில் சொல்லப்படுகிறது. அதாவது, மக்கள் அன்றாடப் பிரச்னைகளில் மூழ்கியிருக்கின்றனர். பெரும் பொருளாதார சுமையோடு இருக்கின்றனர். எனவே, பசியோடு இருப்பவர்கள் எவ்வாறு அரசியல் போராட்டங்களில் பங்குகொள்வார்கள்? ஆனால், அவ்வாறான மக்கள் எவ்வாறு நாக விகாரையில் கட்டப்பட்டிருக்கும் வெசாக் கூடுகளை பார்ப்பதற்காகத் திரளுகின்றனர்? தமிழ்நாட்டிலிருந்து வரும் சினிமா நடிகைகளைப் பார்ப்பதற்காக இளைஞர்கள் எவ்வாறு முட்டி மோதுகின்றனர்?

அரசியல் போராட்டங்கள் என்றவுடன்தானா பொருளாதார சுமை நினைவுக்கு வருகிறது? உண்மையில், நெருக்கடியிலிருக்கும் மக்கள்தான் அந்த நெருக்கடியிலிருந்து விடுபட போராட வேண்டும் என்று எண்ணுவார்கள். ஆனால், வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் அவ்வாறு முன்வரவில்லை. இதற்கு பொருளாதாரம் பதில் இல்லை. மாறாக, மக்கள் அரசியல்வாதிகளை நம்பவில்லை. அடுத்தது, முன்வைக்கப்படும் விடயங்களையும் மக்கள் நம்பவில்லை.

ஆனால், யுத்த காலம் அப்படியல்ல. அது வாழ்தலுக்கான நெருக்கடியாக இருந்தது. விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் யுத்தத்தின் விளைவுகளை மக்கள் சுமக்க வேண்டியிருந்தது. மக்கள் அன்றாடம் பாதிக்கப்பட்டுக் கொண்டிருந்தபோது, அரசாங்கத்தின்மீதான கோபமே பிரதானமாக இருந்தது. கூடவே, தங்கள் பிள்ளைகள் யுத்தத்தில் இறக்கின்றபோது அரசாங்கத்தின்மீதான கோபமும் வெறுப்பும் அதிகரித்தது. ஏனெனில் அவர்கள் அவர்களுடைய பிள்ளைகள். இந்தப் பின்புலத்தில் அரச எதிர்ப்பை அரசியலாக்குவதும் பெருப்பிப்பதும் இலகுவாக இருந்தது. ஆனால், இப்போது அமைதியான சூழல். இந்தச் சூழலில் ஒரு கட்சியின்மீதான, ஒரு தலைவன் மீதான நம்பிக்கை என்னும் அடிப்படையில் மக்களைத் திரட்டும் வல்லமையுடன் எவரும் இல்லை. மக்கள் மத்தியில் கவர்ச்சிமிக்க உரைகளை வழங்கி அவர்களுக்குள் புது நம்பிக்கையை விதைக்கும் வல்லமையை தமிழ்த் தேசிய அரசியல் முற்றிலும் இழந்துவிட்டது. இந்த நிலையில்தான் போராட்டங்கள் என்பன மக்கள் இல்லாத ஒன்றாக இருக்கிறது. மக்களை பார்வையாளராக்கும் போராட்டங்களை செய்வதை விடவும் அதனைச் செய்யாமல் இருப்பது நல்லது.

## புதிய கல்வி சீர்திருத்தத்தை மீளாய்வுக்கு பின் முன்னெடுப்பதற்கு கல்வி அமைச்சு இணக்கம்

*கொழும்பு, ஜன. 31*

நாட்டின் கல்வித்துறையில் மேற்கொள்ளப்படவுள்ள புதிய கல்விச் சீர்திருத்தங்களை அவசரமாக நடைமுறைப்படுத்தாமல், முறையான மீளாய்வுகள் மற்றும் கலந்துரையாடல்களின் பின்னரே முன்னெடுக்க கல்வி அமைச்சு இணக்கம் தெரிவித்துள்ளதாக அகில இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

அகில இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் யல்வெல பஞ்ஞாசேகர தேரர் இதனைத் தெரிவித்தார். கிராமப்புறங்களிலும் நகர்ப்புறங்களிலும் உட்கட்டமைப்பு வசதிகள் போதிய அளவில் இல்லாத நிலையிலும், பெற்றோர் பெரும் நிதிச் சுமைகளைச் சுமந்து தமது பிள்ளைகளின் கல்விக்கான ஏற்பாடுகளை செய்து வருவதாக அவர் குறிப்பிட்டார்.

ஆறாம் தரத்திற்கான கல்விச் சீர்திருத்தங்களை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு சில தரப்புகள் அழுத்தம் வழங்கிய போதிலும், அவற்றை முறையான மீளாய்வு மற்றும் கலந்துரையாடல்களின் பின்னரே முன்னெடுக்க அமைச்சர் உறுதியளித்துள்ளதாகவும், மார்ச் அல்லது ஏப்ரல் மாதங்களில் அவசரமாக நடைமுறைப்படுத்தப் போவதில்லை எனத் தெரிவித்துள்ளதாகவும் அவர் கூறினார். இந்த முடிவு மக்களின் குரலுக்கும் தொழிற்சங்கங்களின் கோரிக்கைகளுக்கும் மதிப்பளிக்கும் ஜனநாயகப் பண்பை வெளிப்படுத்துவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், தொழிற்சங்கங்கள் வெறும் உரிமைகளுக்காகப் போராடும் அமைப்புகள் அல்ல் மாணவர்களின் நலன் மற்றும் கல்வித் தர உயர்வுக்காகப் பணியாற்றும் அமைப்புகள் என்றும் அவர் தெரிவித்தார். குறிப்பாக, 1ஆம் தரத்திற்கான சீர்திருத்தங்களை ஆரம்பித்து, 6ஆம் தரத்திற்கான திட்டத்தை தற்காலிகமாக நிறுத்தி மீளாய்வு செய்யும் கோரிக்கைக்கு அரசாங்கம் இணங்கியுள்ளதாகவும் அவர் கூறினார். (அ)

## சிறைக் கைதி தப்பியோட்டம்!

*கொழும்பு, ஜன. 31*

மாத்தறை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதி ஒருவர் சிறைச்சாலையிலிருந்து தப்பிச் சென்றுள்ளதாக சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தப்பிச் சென்ற கைதி பாணந்துறை-குருப்புமுல்ல பிரதேசத்தைச் சேர்ந்தவர் ஆவார். குறித்த கைதி சட்டவிரோத மதுபான உற்பத்தி தொடர்பில் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் கீழ் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

குறித்த கைதி நேற்று முன் தினம் மாலை சிறைச்சாலையில் சுத்தம் செய்யும் பணிகளில் ஈடுபட்டிருந்த போது சிறைச்சாலை அதிகாரிகளின் பாதுகாப்பிலிருந்து தப்பிச் சென்றுள்ளதாக சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், குறித்த கைதி 78 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு விடுவிக்கப்படவிருந்ததாக சிறைச்சாலை அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர். (அ)

## தேங்காய் எண்ணெய் விசேட வரி நீக்கம் நுகர்வோரின் சுகாதாரத்துக்கு அபாயம்!

### தேசிய நுகர்வோர் இயக்கம் எச்சரிக்கை

*கொழும்பு, ஜன. 31*


தேங்காய் எண்ணெய் மற்றும் பாம் எண்ணெய் மீது நிலவும் விசேட வரியை நீக்க அரசாங்கம் முன்வைத்துள்ள வரவு-செலவுத் திட்ட யோசனை காரணமாக, தேங்காய் எண்ணெயுடன் உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் எண்ணெய் வகைகள் கலந்து சந்தைக்குக் கொண்டுவரப்படும் அபாயம் உள்ளதாக நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தேசிய இயக்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த அந்த இயக்கத்தின் தலைவர் ரஞ்சித் விதானகே, இந்த யோசனை நடைமுறைப்படுத்தப்பட்டால் உள்ளூர் தேங்காய் எண்ணெய் விலை அதிகரிக்கும் அபாயம் இருப்பதாகக் கூறினார்.

இதன் விளைவாக எதிர்வரும் ஏப்ரல் 1ஆம் திகதி முதல் சந்தையில் தேங்காய் எண்ணெய் விலை உயரக்கூடும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். தேங்காய் எண்ணெய் விலை உயர்ந்தால், பாம் எண்ணெய் மற்றும் ஏனைய எண்ணெய் வகைகள் சந்தையில் அதிகளவில் புழக்கத்திற்கு வரும் அபாயம் உள்ளதாகவும் அவர் எச்சரித்தார்.

வைத்தியர்களின் கருத்துப்படி, அதிக சூட்டில் உணவைப் பொரிப்பதற்கு தேங்காய் எண்ணெய் மட்டுமே உகந்ததாகவும், பாம் எண்ணெய் உள்ளிட்ட பிற எண்ணெய் வகைகளைப் பயன்படுத்துவது பல்வேறு சுகாதார அபாயங்களை ஏற்படுத்தும் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி - 31 சனிக்கிழமை
விசுவாவசு வருடம் - தை 17
நல்ல நேரம் : 07.31 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : சதுர்த்தசி




**மேடம்**
சொத்து பிரச்சினைக்கு சுமுக தீர்வு காண்பீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். தவியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும். உத்தியோகத்தில் உயர திகாரிகள் முக்கிய ஆலோசனை தருவார்கள்.

**இடபம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த பிரச்சினைகள் நீங்கும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். வியாபாரத்தில் தள்ளிப்போன ஒப்பந்தம் கையெழுத்தாகும்.

**மிதுனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் செலவுகளை குறைக்க முடியாமல் திணறுவீர்கள். சிலர் உங்களை குறை கூறினாலும் அதை பெரிதாக்க வேண்டாம். முன்கோபத்தை தவிர்க்க வேண்டிய நாள்.

**கடகம்**
திட்டமிட்ட காரியங்களை அலைந்து திரிந்து முடிக்க வேண்டி வரும். வியாபாரத்தில் வேலையாட்களால் பிரச்சினைகள் வந்து நீங்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் மோதல்கள் வேண்டாமே.

**சிம்மம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உடன்பிறந்தவர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள். புது முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். புது பொறுப்புகளை ஏற்பீர்கள்.

**கன்னி**
பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். உத்தியோகத்தில் தலைமையின் ஆதரவுக் கிடைக்கும். சாதிக்கும் நாள்.

**துலாம்**
கடந்த இரண்டு நாட்களாக அலைச்சல் டென்ஷன் குறையும். குடும்பத்தில் நிம்மதி உண்டு. பாதியில் நின்ற வேலைகள் முடியும். விலகிச் சென்ற உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள்.

**விருச்சிகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சந்தேகப்படுவதை முதலில் நிறுத்துங்கள். யாரையும் நம்பி உறுதிமொழி தர வேண்டாம். அதிகாரிகளை பகைத்துக் கொள்ளாதீர்கள். நாவடக்கம் தேவைப்படும் நாள்.

**தனுசு**
சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். வியாபாரத்தில் புது வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள். திறமைகள் வெளிப்படும்.

**மகரம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். புதுமைகள் எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள்.

**கும்பம்**
புதிய திட்டங்கள் நிறைவேறும். பிள்ளைகளின் உயர் கல்வி உத்யோகம் குறித்து யோசிப்பீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் சலுகைகள் கிடைக்கும்.

**மீனம்**
அரசு காரியங்கள் சாதகமாக முடியும். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாப மடைவீர்கள். உத்தியோகத்தில் சில சூட்சுமங்களை கற்றுக் கொள்வீர்கள்.

# யாழ். சர்வதேச விமான நிலையத்தின் அபிவிருத்தி பணி விரிவுபடுத்தப்படும்

## புதிய விமான சேவைகள் தொடர்பிலும் ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜன. 31

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் அபிவிருத்தி பணிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் புதிய விமான சேவைகள் தொடர்பில் ஆராய்ந்து வருகிறோம் என்று கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், "அரசாங்கம் என்ற வகையில் நாட்டின் அபிவிருத்தியை எந்தத் தடைகளும் இல்லாமல் மேற்கொண்டு வருகிறோம்.

அந்த வகையில் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் பொதுமக்கள் காத்திருப்பு பகுதி வேலைகள் முடிவுறும் தருவாயில் உள்ள நிலையில் அடுத்த கட்ட செயல்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்தி வருகிறோம்.

கடந்த அரசாங்கத்தில் குறித்த விமான நிலையம் ஆரம்பிக்கப்பட்டாலும் முழுமையான விமான நிலையமாக மாற்றம் பெறாத நிலையில் எமது அரசாங்கம் அதனை முழுவீச்சில் செயல்படுத்தி வருகிறது.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் காத்திரமான பங்களிப்பை மேற்கொள்ளும் என்பதில் எமக்கு நம்பிக்கை இருக்கிறது.

யாழ்ப்பாணம் விமான நிலைய சேவைகளை விரிவுபடுத்துவது தொடர்பில் விமான சேவைகள் நிறுவனங்களுடன் கலந்துரையாடி வருகின்ற நிலையில் சேவைகளை விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் எடுக்கப்படும்."- என்றார். (எ-03)

# பெண் செயல்பாட்டாளர்களுக்கு எதிராக சமூக ஊடகங்களில் அவதூறு பிரசாரம்

## மன்னாரில் கண்டன குரல்

மன்னார், ஜன. 31

மன்னார் மாவட்டத்தில் அரசியல் மற்றும் சமூகப் பணிகளில் ஈடுபடும் பெண்களுக்கு எதிராக போலி முகநூல் பக்கங்கள் ஊடாக முன்னெடுக்கப்படும் அவதூறு பிரசாரங்களுக்கு மன்னார் மாதர் அபிவிருத்தி ஒன்றியம் வன்மையான கண்டனத்தை தெரிவித்துள்ளது.

சமூக ஊடகங்கள் வாயிலாக பெண்கள் மீது கட்டவிழ்த்து விடப்படும் இழிவுபடுத்தல்களுக்கு எதிராக நேற்று முன்தினம் காலை மன்னார் மாதர் அபிவிருத்தி ஒன்றியத்தின் அலுவலகத்தில் விசேட ஊடக சந்திப்பு நடைபெற்றது.

குறித்த ஒன்றியத்தின் தலைவி மகாலட்சுமி குருசாந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் பெண் உறுப்பினர்கள், சமூகச் செயல்பாட்டாளர்கள் மற்றும் மீனவ அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

"சமூக மாற்றத்துக்காக உழைக்கும் பெண்கள் மீது பாலின அடிப்படையிலான தாக்குதல்கள் மற்றும் அச்சுறுத்தல்களை தொடுப்பது, அவர்களின் கருத்து சுதந்திரத்தை முடக்கும் செயலாகும். இது ஒட்டுமொத்த ஜனநாயகத்துக்கே பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.

அரசியல் ரீதியான முரண்பாடுகளைத் தாண்டி, பெண்களின் தனிப்பட்ட வாழ்க்கை, உடல் மற்றும் குணாதிசயங்களை குறிவைத்து தாக்கப்படுவது பாரிய மனித உரிமை மீறலாகும்.

இவ்வாறான திட்டமிட்ட அவதூறுகள் பெண்களின் தலைமைத்துவ துணிச்சலை தளர்த்துவதுடன், அவர்களை பொது வெளியில் இருந்து மௌனிக்க செய்யும் நோக்கத்தை கொண்டவையே.

போலி முகநூல் கணக்குகளை பயன்படுத்தி அவதூறு பரப்புவோரை கண்டறிந்து, அவர்களுக்கு எதிராக பொறுப்புள்ள அதிகாரிகள் உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பாதிக்கப்பட்ட பெண்களுக்கு தேவையான பாதுகாப்பு, நீதி மற்றும் உளநல ஆதரவை அரசு வழங்க வேண்டும்"- என்று வலியுறுத்தினர். (எ)

# வவுனியாவில் இ. போ. ச. பேருந்து தனியார் பேருந்து மோதி விபத்து

வவுனியா, ஜன. 31

வவுனியா - நெளுக்குளம் பகுதியில் இ. போ. ச. பேருந்து மற்றும் தனியார் பேருந்து மோதி விபத்துக்குள்ளாகின.

வவுனியா- மன்னார் வீதியில் நெளுக்குளம் பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் இந்த விபத்து இடம்பெற்றது.

வவுனியா நோக்கி சென்ற இ.போ.ச. பேருந்தும் அதே திசையில் பின்னால் வந்த தனியார் பேருந்தும் மோதியதில் விபத்து ஏற்பட்டுள்ளது. எனினும், எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை. இருப்பினும், இரு பேருந்துகளும் சேதமடைந்தன.

சம்பவம் தொடர்பில் நெளுக்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-10)

# புதிய பேருந்து சேவை

யாழ்ப்பாணம், ஜன. 31

வடமராட்சி கிழக்கு, பருத்தித்துறை- கேவில் வரை போக்குவரத்தில் பல்வேறு குறைபாடுகள் தொடர்ச்சியாக இடம்பெற்ற நிலையில் மாலை 06: 15 மணிக்கு பருத்தித்துறையிலிருந்து கேவிலுக்கு செல்லும் கடைசி பேருந்து சேவைக்கு 54 ஆசனங்கள் கொண்ட புதிய பேருந்து நேற்று முன்தினம் முதல் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

இந்த பேருந்து கேவிலிருந்து பாடசாலை சேவையாக காலை 07: 40 மணியளவில் பருத்தித்துறையை வந்தடையும் இதனால் பயணிகள் பெரிதும் நன்மையடைந்துள்ளனர்.

இவ்வளவு காலமும் சிறிய பேருந்து ஒன்று சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. (எ-08)

# யாழ். பல்கலைக்கழக இலச்சினையை அனுமதி இல்லாமல் பயன்படுத்த தடை

யாழ்ப்பாணம், ஜன. 31

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இலச்சினையை அனுமதி இல்லாமல் பயன்படுத்துவது தண்டனைக்குரிய குற்றமாகும். அனுமதி பெறாமல் இலச்சினையை பயன்படுத்தும் தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பல்கலைக்கழக பதிவாளர் வி. காண்டீபன் விடுத்துள்ள செய்தி குறிப்பில்,

"யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 40ஆவது பொதுப் பட்டமளிப்பு வைபவம், எதிர்வரும் பெப்ரவரி மாதம் 19, 20, 21, 22 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இதன் போது பட்டதாரிகளுக்கு வழங்கப்படும் பல்கலைக்கழக இலச்சினை பொறிக்கப்பட்ட கழுத்துமாலை, பட்டச் சான்றிதழ் சுருள் மற்றும் பல்கலைக்கழகப் இலச்சினை பொறிக்கப்பட்ட பரிசுப் பொருட்கள் என்பன தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களால் விற்பனை செய்யப்படுவதாக பலகலைக்கழக நிர்வாகம் அறிகிறது. இது சட்டப்படி குற்றச் செயலொன்றாகும்.

பல்கலைக்கழக மூதவை மற்றும் பேரவையின் அனுமதியுடன், நடைமுறைகளின் ஊடாக பல்கலைக்கழக இலச்சினையை பயன்படுவதற்கு பதிவாளரிடமிருந்து உரிய ஒப்புதல்கள் பெறப்பட வேண்டும். அவ்வாறில்லாமல் எவரேனும் தனிநபரோ அல்லது நிறுவனங்களோ இலச்சினையை பயன்படுத்தினால் அவர்களுக்கு எதிராக உரிய சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன்"- இவ்வாறு அந்த செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.(எ-03)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் ஜனாதிபதி செயலகம் பதில் இல்லை!

## தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர்

கொழும்பு, ஜன. 31

மாகாண சபைத் தேர்தல் தொடர்பாகத் தேர்தல் ஆணைக்குழு பலமுறை ஜனாதிபதி செயலகத்துக்கு கடிதங்கள் அனுப்பியும் இதுவரை எந்த பதிலும் கிடைக்கவில்லை எனத் தேர்தல் ஆணைக்குழுத் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

சட்ட ரீதியான சிக்கல் காரணமாகவே இந்தத் தேர்தலை முன்னெடுக்க முடியாமல் உள்ளதாக அவர் கூறினார். தேவையான சட்டத் திருத்தங்கள் மேற்கொள்ளப்படாத வரை ஆணைக்குழுவால் எவ்வித நடவடிக்கையும் எடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும், இது குறித்து தெளிவும் நடவடிக்கையும் கோரி சுமார் நான்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதையும், அதற்கு



இதுவரை பதில் வராததையும் அவர் சுட்டிக்காட்டினார்.

மாகாண சபைத் தேர்தலை முன்னைய முறையில் அல்லது புதிய எல்லை நிர்ணயம் தெரிவு செய்யப்படும் பட்சத்தில், புதிய முறையில் நடத்தவேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். புதிய முறையெனில் எல்லை நிர்ணய செயல்முறைக்கு சுமார் ஒரு ஆண்டு காலம் ஆகும் என்பதால் தாமதமின்றி ஆரம்பிக்க வேண்டிய அவசியம் இருப்பதாகவும் அவர் எச்சரித்தார்.

2015 முதல் 2020 காலப்பகுதியில் ஐக்கிய தேசிய முன்னணி அரசால் கொண்டு வரப்பட்ட சட்டத் திருத்தம் காரணமாக ஏற்பட்ட சட்ட சிக்கலால் மாகாண சபைத் தேர்தல் பல ஆண்டுகளாக நிலுவையில் உள்ளது.

எல்லை நிர்ணய அறிக்கை முன்பே தயாரிக்கப்பட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தாலும், அது அப்போது நிராகரிக்கப்பட்டதால் செயல்முறை இடை நடுவில் நின்றுவிட்டது. இந்நிலையில், மாகாண சபைத் தேர்தலை நடத்துவது குறித்து ஆய்வு செய்ய பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை நியமிக்க அரசு திட்டமிட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# இலஞ்ச புலனாய்வு குறியீட்டில் இலங்கை 121 ஆவது இடத்தில்!

கொழும்பு, ஜன. 31

2024 ஆம் ஆண்டு இலஞ்ச புலனாய்வு குறியீட்டில் இலங்கை 121 ஆவது இடத்தில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் செயலாளர் நந்திக சனத் குமாநாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில், இலஞ்சம் மற்றும் மோசடிக்கு எதிரான பொதுமக்களின் எதிர்பார்ப்புகளை அரச அதிகாரிகள் புரிந்துகொள்ளவேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

கல்வி மற்றும் சுகாதாரம் போன்ற துறைகளில் தரவரிசையில் இலங்கை உயர் இடத்திலிருந்தாலும், இலஞ்ச புலனாய்வு குறியீட்டில் இலங்கை பின்தங்கியே உள்ளது.

இது ஏனைய துறைகளின் தரவரிசையில், பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மக்கள் எழுச்சியின் முக்கிய கோஷம், இலஞ்ச அரசியலுக்கு எதிரானதாக இருந்தாலும், அந்த குற்றச்சாட்டுக்கள் இலஞ்சம் நிறைந்த அரசியல்வாதிகள் மீது மாத்திரமன்றி, இலஞ்சம் நிறைந்த அரச அதிகாரிகள் மீதும் சுமத்தப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, அரசியல்வாதிகள் மாத்திரமன்றி, அரச அதிகாரிகளும் மக்களின் எழுச்சி மற்றும் மக்களின் எதிர்பார்ப்புகளைப் பற்றிய புரிதலைக் கொண்டிருக்க வேண்டும்.

அரச ஊழியர்கள், மக்களுக்குச் சிறந்த சேவையை வழங்கக் கடமைப்பட்டுள்ளதால் அரச அதிகாரிகள் நேர்மையை வளர்த்துக் கொள்வதில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் ஜனாதிபதியின் செயலாளர் நந்திக சனத் குமாநாயக்க தெரிவித்துள்ளார்.

(அ)

# போர்க் காலத்தில் முறையற்ற வகையில் வெளிநாடு சென்றோர் நாடு திரும்ப வசதி

கொழும்பு, ஜன. 31

நாட்டில் நிலவிய யுத்த சூழ்நிலையின் போது முறையற்ற வகையில் வெளிநாடுகளுக்குச் சென்றவர்கள் மீண்டும் எந்தவித இடையூறுகளும் இன்றி நாட்டுக்குத் திரும்பி வருவதற்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

அவ்வாறானவர்கள் மீண்டும் தாயகம் திரும்பும் போது, எவ்வித இடையூறுகளுமின்றி நாட்டுக்குள் அனுமதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதற்கு வசதியாக தற்போதுள்ள குடிவரவு, குடியகல்வு சட்டத்தின் சில நிபந்தனைகளை மாற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். இந்த நிலையில், இந்தியாவில் தங்கியுள்ள இலங்கையர்கள் தொடர்பில், அந்த நாட்டு அதிகாரிகளுடன் கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவ்வாறு தாயகம் திரும்ப விரும்புவோரின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் தனிப்பட்ட தகவல்கள் கோரப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

முன்னர் இந்தியாவிலிருந்து தாயகம் திரும்பிய சிலர், விமான நிலைய அதிகாரிகளால் தடுத்து வைக்கப்பட்டு, அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தன. இந்த நிலைப்பாட்டை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் அமைப்பு ஆட்சேபித்திருந்தது.

இந்த பின்னணியிலேயே, குடிவரவு, குடியகல்வு சட்டத்திலுள்ள நிபந்தனைகளில் திருத்தங்களை மேற்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டதாகவும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# இலங்கை கல்வி நிர்வாக சேவையில் 1,500 வெற்றிடங்களை நிரப்புத் தடை

கொழும்பு, ஜன. 31

இலங்கை கல்வி நிர்வாக சேவை மூன்றாம் தரத்தில் தற்போது நிலவும் 1,500 இற்கும் மேற்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கு இடைக்காலத் தடை விதிக்கக் கோரி இலங்கை கல்வி நிர்வாக சேவை மூன்றாம் தரப் பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகள் குழு, தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரிக்க உயர் நீதிமன்றம் நேற்று முன் தினம் உத்தரவிட்டது.

இந்த மனு நேற்று முன் தினம் பிரதம நீதியரசர் பிரீத்தி பத்மன் சூரசேன, நீதியரசர்கள் அச்சல வெங்கப்புலி மற்றும் அர்ஜ/ன ஒபேசேகர ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்றத்தின் மூன்று நீதியரசர்கள் கொண்ட அமர்வு முன் விசாரிக்கப்பட்டது. சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான மூத்த அரச சட்டவாதி சுரேகா அஹ்மத், தனது சிரேஷ்ட சட்டவாதி ஆஜராக முடியாததால், வேறு திகதியைக் கோரியதாக நீதிமன்றத்திடம் தெரிவித்தார்.

இந்த கோரிக்கையை ஏற்றுக் கொண்ட நீதியரசர்கள் குழு, மனுவை பெப்ரவரி 23ஆம் திகதி பரிசீலிக்க உத்தரவிட்டது.

இலங்கை கல்வி நிர்வாக சேவையின் மூன்றாம் தரத்துக்கான தேர்வு செப்ரெம்பர் 21, 2023 அன்று நடத்தப்பட்டதாகவும் தாமும் அதற்கு ஆஜராகி 735 பரீட்சார்த்திகள் தேர்ச்சிப் பெற்றதாகவும் மனுதாரர்கள் கூறுகின்றனர்.

இருப்பினும், இந்தப் பரீட்சையில் கலந்துகொண்ட சில பரீட்சார்த்திகள் இதற்குத் தகுதியற்றவர்கள் என்று சுட்டிக்காட்டும் மனுதாரர்கள், இந்தத் தேர்வில் பல்வேறு முறைகேடுகள் நடந்ததாகக் கூறுகின்றனர்.

எனவே, தொடர்புடைய பரீட்சையை இரத்துச் செய்து மீண்டும் தேர்வு நடத்த உத்தரவிட வேண்டும் என்றும் இந்த மனு விசாரிக்கப்பட்டு இறுதி முடிவு அறிவிக்கப்படும்வரை அதனுடன் தொடர்புடைய வெற்றிடங்களை நிரப்புவதைத் தடுக்கும் உத்தரவைப் பிறப்பிக்கவேண்டும் என்றும் மனுதாரர்கள் உயர் நீதிமன்றத்தை கோரியுள்ளனர்.

(அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூ. 2 கோடியே 30 இலட்சம் பெறுமதியான போதைப்பொருட்களுடன் இருவர் கைது!

## சம்மாந்துறை பொலிஸார் அதிரடி நடவடிக்கை



சம்மாந்துறை, ஜன. 31
2 கோடியே 30 இலட்சம் ரூபாய் பெறுமதியான போதைப் பொருட்களை சூட்சுமமாக வீடு களில் பதுக்கி வைத்திருந்த இரு சந்தேக நபர்களை அம்பாறை - சம்மாந்துறை பொலிஸார் கைது செய்தனர்.

அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியின் ஊடாக கொழும்பில் இருந்து கல்முனை வழியாக சம்மாந் துறை பகுதிக்கு சென்ற அதி சொகுசு பேருந்து ஒன்றில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை அதிகாலை 04. 30 மணியளவில் கைதான 49 வயது மதிக்கத்தக்க சந்தேக நபரது வாக்குமூலம் மற் றும் சம்மாந்துறை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி கே.என்.ஆர். பெரேராவுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தக வலுக்கமைய சம்மாந்துறை புறநகர் பகுதிகளில் உள்ள இரு வீடுகளில் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இரு வேறு சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்டு பல்வேறு வகையான போதைப்பொருட்க ளுடன் மாமா மற்றும் மரும கன் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப் பட்ட குறித்த இரு சந்தேக நபர் கள் வசமிருந்து குஷ், கேரளக் கஞ்சா, ஐஸ், ஹெரோயின் உட் பட பல வகையான போதைப் பொருட்கள், அதி நவீன தொலை பேசிகள், பெருந் தொகை பணம் என்பன பறிமுதல் செய்யப்பட் டன.

சோதனை நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்ட இரு வீடுக ளிலும் அதிகளவான சி.சி.ரிவி கமராக்கள் பொருத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வந்ததாக பொலிஸார் கூறினர்.

இந்த நடவடிக்கையில் கைது செய்யப்பட்ட இரு சந் தேக நபர்களும் மேலதிக விசார ணைக்கு உட்படுத்தப்பட்டுள்ள நிலையில் மாமா மற்றும் மரும கன் உறவு முறையினர் என்று பொலிஸார் அடையாளம் கண் டுள்ளனர். இவ்விரு சந்தேக நபர் களும் சம்மாந்துறை பகுதியில் நீண்ட காலமாக போதைப் பொருட்களை வியாபாரம் செய் ததுடன் விநியோகம் செய்து வந்துள்ளமை விசாரணையில் தெரியவந்துள்ளது.

(எ-01)

# வாகரையில் உள்ளூர் தயாரிப்பு துப்பாக்கிகளுடன் நால்வர் கைது

மட்டக்களப்பு, ஜன. 31
வாகரை பொலிஸ் பிரிவி லுள்ள கட்டுமுறிவு பிரதேசத்தில் சட்டவிரோதமான முறையில் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கிகளுடன் 4 பேரை விசேட அதிரடிப்படையினர் கைது செய்து ஒப்படைத்தனர் என்று பொலிஸார் தெரிவித்த னர்.


விசேட அதிரடிப்படையின ருக்கு கிடைத்த தகவல் ஒன்றை யடுத்து குறித்த பிரதேசத்தில் சம்பவ தினமான நேற்று முன்தி னம் காலை வாகரை விசேட அதி ரடிப்படை முகாமின் பொறுப் பதிகாரி பி.பி. அமில தலைமை யிலான குழுவினர் சுற்றிவளைத்து தேடுதல் நடத்தினர்.

இதன்போது, மறைத்து வைக்கப்பட்டிருந்த உள்ளூர் தயாரிப்பு துப்பாக்கிகள் நான்கு மீட்கப்பட்டதுடன் 28, 32, 42, 48 வயதுடைய நான்கு பேரை கைது செய்தனர். இவர்கள் அந்த பகுதியைச் சேர்ந்தவர்கள் என வும் வன விலங்குகளை இறைச் சிக்காக துப்பாக்கியால் சுட்டு வேட்டையாடி வருபவர்கள் எனவும் ஆரம்பகட்ட விசாரணை யில் தெரியவந்துள்ளது.

இவ்வாறு கைது செய்யப் பட்டவர்களை விசேட அதிர டிப்படையினர் ஒப்படைத்துள் ளதாகவும் இவர்களை நீதிமன் றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாகவும் பொலி ஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை வாகரை பொலி ஸார் மேற்கொண்டு வருகின்ற னர்.

(எ)



# ஓட்டோ சங்கங்களிடையே தொடர்ந்து முறுகல் நிலை

மட்டக்களப்பு, ஜன. 31
மட்டக்களப்பு, மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபைக்குட்பட்ட களுவாஞ்சிக் குடி ஓட்டோ சாரதிகளுக்கும் போரதீவுப்பற்று பிரதேச சபைக் குட்பட்ட ஓட்டோ சாரதிகளுக் கும் இடையில் தொடர்ந்து முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

களுவாஞ்சிக்குடி ஓட்டோ சாரதிகள், களுவாஞ்சிக்குடி பொதுச் சந்தைக்கு அருகில் தமது ஓட்டோக்களை நிறுத்த அனுமதியளிப்பதில்லை என வும் இதனால் தமது வாழ்வாதா ரம் தொடர்ந்து பாதிக்கப்படுவ தாக போரதீவுப்பற்று ஓட்டோ சாரதிகள் குற்றம்சாட்டினர்.

கடந்த புதன்கிழமை காலை களுவாஞ்சிக்குடி ஓட்டோ சார திகள் சங்க செயலாளருக்கும் போரதீவுப்பற்று ஓட்டோ சார திகள் சங்கத்தினருக்கும் முறு கல் நிலை ஏற்பட்டுள்ளது.

களுவாஞ்சிக்குடி ஓட்டோ சாரதிகள் சங்க செயலாளர், தம்மை ஒருபோதும் ஓட்டோக் களை நிறுத்த அனுமதி தரமு டியாது என்று கூறியதாக போர தீவுப்பற்று பிரதேச ஓட்டோ சாரதிகள் கூறினர்.

(எ)

# நுவரெலியா, மாத்தளையில் அவ்வப்போது மழை பெய்யும்

கொழும்பு, ஜன. 31
கிழக்கு மற்றும் ஊவா மாகா ணங்களிலும் மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களி லும் அவ்வப்போது மழை பெய் யும் என்று எதிர்பார்க்கப்படு கின்றது.

இதேவேளை, ஊவா மாகா ணத்திலும் மட்டக்களப்பு மற் றும் அம்பாறை மாவட்டங்க ளிலும் சில இடங்களில் 50 மில்லி மீற்றருக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க் கப்படுகின்றது.

வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் அம்பாந் தோட்டை மாவட்டத்திலும் இடைக்கிடையே மழை பெய் யும்.

நாட்டின் ஏனைய பிரதேசங் களில் பல இடங்களில் பிற்பகல் 02.00 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்க ளிலும் காலி, மாத்தறை மற்றும் அநுராதபுரம் மாவட்டங்களி லும் சில இடங்களில் அதிகாலை வேளையில் பனிமூட்டமான நிலை காணப்படும்.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக வீசக் கூடிய பலத்த காற்று மற் றும் மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவை யான முன்னெச்சரிக்கை நடவ டிக்கைகளை எடுத்துக் கொள் ளுமாறு பொதுமக்கள் அறிவு றுத்தப்படுகின்றார்கள் என்று வளிமண்டலவியல் திணைக்க ளம் தெரிவித்துள்ளது.

(எ)

# ஹற்றனில் புதிதாக திறக்கப்பட்ட சுப்பர் மார்க்கெட் மீது தாக்குதல்

## நால்வர் பொலிஸாரால் கைது

ஹற்றன், ஜன. 31
ஹற்றன் நகரின் மணிக்கூட் டுக் கோபுரத்துக்கு அருகாமை யில், சுற்றுவட்ட வீதியில் புதி தாகத் திறக்கப்பட்ட சுப்பர் மார்க் கெட் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பில் நான்கு சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்தனர்.

முறையான அனுமதியின்றி இந்த சுப்பர் மார்க்கெட் திறந்து வைக்கப்பட்டதால் ஹற்றன் நக ரில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

குறித்த விற்பனை நிலையத்தில் மீன் மற்றும் கோழி இறைச்சி விற் பனைக்கு வைக்கப்பட்டிருந்தது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்த ஹற்றன் நகர மீன் மற்றும் கோழி இறைச்சி வியாபாரிகளும் அங்கு பணிபுரியும் ஊழியர்களும் கடையை திறக்க கூடாது என போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த சுப்பர் மார்க்கெட்டை திறப்பதற்கான அனுமதி கோரப் பட்டபோது, கடந்த நகர சபை கூட்டத்தில் அதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. இவ்வா றான பின்னணியிலேயே சுப்பர் மார்க்கெட் திறந்து வைக்கப் பட்டுள்ளது.

இது குறித்து கருத்து தெரி வித்த நகர சபை தலைவர், "தற் போதைய சட்ட விதிகளின்படி குறித்த இடத்தில் மீன் மற்றும் கோழி இறைச்சி விற்பனை செய்ய அனுமதி வழங்க முடியாது.

எதிர்வரும் 12ஆம் திகதி நடைபெறவுள்ள நகர சபை கூட்டத்தில், நகரின் மத்தியில் அமைந்துள்ள இறைச்சி விற் பனை நிலையங்கள் தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்ப டும்"- என்றார்.

இதனைத் தொடர்ந்து, சம் பவ இடத்துக்கு வருகை தந்த பொதுச் சுகாதார பரிசோதகர்க ளும் வருமான வரித்துறை அதி காரிகளும், அடுத்த நகர சபை கூட்டம் நடைபெறும் வரை கடையை மூடி வைக்குமாறு உத்தரவிட்டனர்.

இந்த நிலையில், நேற்று முன் தினம் மாலை குறித்த சுப்பர் மார்க்கெட்டுக்குள் புகுந்த கும் பல் ஒன்று அங்கிருந்த குளிரூட் டிமீது தாக்குதல் நடத்தியுள்ளது.

சம்பவம் குறித்து தகவலறிந்த ஹற்றன் பொலிஸ் நிலைய உத் தியோகத்தர்கள் மற்றும் ஹற் றன் கைரேகை அடையாளப் பிரிவினர் சம்பவ இடத்துக்கு விரைந்து விசாரணைகளை முன் னெடுத்தனர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்து டன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளை ஹற்றன் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.

(எ)

# வான் விபத்து: சிறுவன் காயம்



ஹற்றன், ஜன. 31
ஹற்றன் - நுவரெலியா பிர தான வீதியில், திம்புள்ள பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சென் கிளயார் தோட்டத்துக்கு அரு கில் நேற்று முன்தினம் வியாழக் கிழமை முற்பகல் இடம்பெற்ற வாகன விபத்தில் சிறுவன் ஒரு வர் காயமடைந்து மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள் ளார்.

சென்கிளயார் பகுதியிலிருந்து ஹற்றன் நோக்கி சென்ற வான் வீதியை விட்டு விலகி பள்ளத் தில் வீழ்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றது.

இதன்போது, வாகனத்தில் இருந்த ஒரு சிறுவன் காயமடைந் ததோடு, பிரதேச மக்களின் உத வியுடன் உடனடியாக கொட்ட கலை பிரதேச மருத்துவமனை யில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வாகனம் சாரதியின் கட்டுப் பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதாக முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் திம்புள்ள பத்தனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3 மாதங்களில்...

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையில் கடந்த ஆண்டு ஒக்ரோபர் 30ஆம் திகதி ஆரம்பமான இந்த நடவடிக்கையில் நேற்று முன்தினம் வரையில் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்தக் காலப் பகுதியில் 83 ஆயிரத்து 382 சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. 508 கிலோ 170 ஹெரோயின், 1,400 கிலோ 666 கிராம் ஐஸ், 11 கிலோ 250 கிராம் கொக்கேயின், 2,354 கிலோ 571 கிராம் கஞ்சா, 57 இலட்சத்து 8 ஆயிரத்து 634 கஞ்சா செடிகள், 174 கிலோ 222 கிராம் குஷ், 46 கிலோ 563 கிராம் ஹசீஸ், ஒரு இலட்சத்து 43 ஆயிரத்து 715 போதை மாத்திரைகள், 120 கிலோ 985 கிராம் மதனமோதகம், 154 கிலோ 644 கிராம் மாவா போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதானவர்களில் ஆயிரத்து 498 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## நாளாந்த...

தொழிலாளர்களுக்கான நாளாந்த வேதனத்தை ஆயிரத்து 750 ரூபாய் வரை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதன்போது அடிப்படைச் சம்பளத்தை ஆயிரத்து 350 ரூபாவிலிருந்து 1,550 ரூபாயாக அதிகரிப்பதற்கும் வருகைக்கான கொடுப்பனவாக 200 ரூபாயை அரசாங்கம் செலுத்துவதற்கும் இணக்கம் காணப்பட்டது.

இதற்கமைவாக 500 கோடி ரூபாயை கடந்த வரவு - செலவு திட்டத்தில் அரசாங்கம் ஒதுக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## டித்வா...

23 ஆயிரத்து 914 குடும்பங்களுக்கு அந்த நிதி வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், வீட்டு உபகரணங்களை இழந்த ஒரு இலட்சத்து 63 ஆயிரத்து 509 குடும்பங்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டத்தின் கீழ் 70 சதவீதத்துக்கும் அதிகமானோருக்கு அதாவது ஒரு இலட்சத்து 15 ஆயிரத்து 757 குடும்பங்களுக்கு இதுவரை இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது - என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

## தமிழ்...

தாம் மேற்கொள்வதாகக் கூறி வருகிறார்கள்.

தங்களின் உள்ளூராட்சி அதிகாரங்கள் இல்லாத இடங்களில் அதனை பலவீனப்படுத்துவதற்காக அந்த அதிகாரத்துக்கு சமாந்தரமாக உருவாக்கப்பட்ட அமைப்புத்தான் இந்த பிரஜா சக்தி. இது, தமிழ் பகுதிகளில் உள்ளூராட்சி மன்றங்களை பலவீனப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட ஒன்று என்றுதான் கூறவேண்டும்.

கிராமங்களில் அவர்கள் பிரஜா சக்தி தலைவர்களை தெரிவு செய்கிறார்கள். தேசிய மக்கள் சக்தி தங்களோடு நம்பிக்கையாக நிற்பவர்களைத்தான் தெரிவு செய்கிறார்களே தவிர, மக்கள் தெரிவு செய்த தலைவராக அந்தத் தலைவர் இருக்கவில்லை. இங்கு ஜனாதிபதி வருகின்ற போது கிளைகள் எல்லாவற்றுக்கும் மக்களை அழைத்து வருமாறு கட்டளையிடப்பட்டதாக செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

கிராம சேவையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பிரஜா சக்தி கட்டமைப்புகளுக்கும் ஆட்களை அழைத்துவர கட்டளை இடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தங்களுடைய பணிகளை வடக்கு, கிழக்கு தமிழர் பகுதிகளில் மேற்கொள்வதற்கே இந்த அமைப்பு செயல்படுகிறது என்று சொல்லி விடலாம். அடிமட்ட மக்கள் மத்தியில் பணியாற்றிய அனுபவம் தேசிய மக்கள் சக்தியின் தலைமை கட்சியான ஜே. வி. பி.யிடம் இருப்பதனால் அது அவர்களுக்கு இந்த இடத்தில் அதிகம் துணை புரிவது காணப்படுகிறது.

தமிழ் தேசிய சக்திகள் இதனுடைய அபாயத்தை சரியாக விளங்கிகொள்ள வேண்டும். தமிழ் தேசிய சக்திகளை பொறுத்தவரை அவர்கள் தொடர்ச்சியாக எதிர்ப்பு அரசியலை செய்து கொண்டிருக்கிறார்களே தவிர தேச நிர்மாண அரசியலில் கவனம் செலுத்தவில்லை. எமது மக்களில் உதவிகளையும் தேவைகளையும் எதிர்பார்ப்பவர்கள் இருக்கிறார்கள். ஆகவே, அந்த நலன்களை பேணவேண்டிய பொறுப்பு தமிழ் தேசிய சக்திகளுக்கு இருக்கிறது.

தமிழ்த் தேசிய சக்திகள் அதில் கவனம் செலுத்தமையால் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அந்த வெற்றிடத்தை நிரப்புகிற ஒரு நிலைமையை நாங்கள் பார்க்கின்றோம். ஆகவே, இது ஓர் அபாயமான விடயம். ஏனெனில் அடிமட்டத்தில் தமிழ் தேசிய அரசியலை பலவீனப்படுத்துகின்றது. உண்மையில் கிராமங்களில் அடிமட்டமாக இருக்கின்ற - அந்த அடிமட்ட மக்களை பலவீனப்படுத்துகின்ற ஓர் அரசியலை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முன்னெடுக்க முனைகிறது. இது தமிழ் தேசிய அரசியலை வேரிலேயே அழுக செய்கின்ற ஒரு நிலைமை. இந்த விடயம் தொடர்பில் வலுவான கவனம் செலுத்த வேண்டிய தேவை இருக்கிறது - என்றார். (ஐ)

# தரம்குறைந்த நிலக்கரி இறக்குமதி; மார்ச்சில் மின் துண்டிப்பு அபாயம்

### ஐக்கிய மக்கள் சக்தி எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 31

அரசாங்கம் திட்டமிட்டு தரமற்ற நிலக்கரியை இறக்குமதி செய்துள்ளதாகவும், அதன் காரணமாக தேவையான அளவு மின்சாரம் உற்பத்தி செய்ய முடியாத நிலை உருவாகியுள்ளதாகவும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் குற்றம்சாட்டினார். இதன் விளைவாக மார்ச் மாதத்தில் மின் துண்டிப்பு ஏற்படும் அபாயம் அதிகம் என அவர் எச்சரித்தார்.

நிலக்கரி இறக்குமதிக்கான விலைமுறி கோரல் நடைமுறையிலேயே மோசடிகள் இடம்பெற்றதாகவும், வழமையான 48 நாள்கள் அவகாசம் 21 நாட்களாக குறைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். ஆரம்பத்தில் குற்றச்சாட்டுகளை நிராகரித்த வலுசக்தி அமைச்சர், பின்னர் மேற்கொண்ட பரிசோதனைகளில் நிலக்கரி தரமற்றது என உறுதி செய்யப்பட்டதாகவும் அவர் கூறினார்.

இந்த நிலக்கரி மற்றும் டீசல் மாபியாக்களின் செயற்பாடுகள் காரணமாக நாடு மீண்டும் மின் துண்டிப்பு நிலைக்கு தள்ளப்படலாம் என்றும், இது மத்திய வங்கி மோசடியை விடப் பாரிய ஊழல் எனவும் மரிக்கார் தெரிவித்தார். (அ)

## புதிய...

சிவில் அமைப்புகள், பல்வேறு மதங்களை சேர்ந்த மதத் தலைவர்கள், மனித உரிமைகள் ஆர்வலர்கள், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்கள் எனப் பலரும் ஒன்றிணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

"அடக்குமுறைச் சட்டங்கள் ஜனநாயகத்தின் எதிரிகள்", "மக்களை ஒடுக்கும் எந்தவொரு சட்டமூலமும் நாட்டிற்குத் தேவையில்லை", என்றும் போராட்டத்தில் பங்கேற்றவர்கள் முழக்கமிட்டனர். (ஐ)

## கரிநாளாக...

வவுனியாவில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பில் யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் தலைவர் த.யதுசன் இதனைத் தெரிவித்தார்.

மேலும், இந்தப் போராட்டமானது வடக்கு, கிழக்கு தழுவிய ரீதியில் மேற்கொள்ளப்படவுள்ளது. அந்தவகையில் வடக்கு மாகாணத்தில் கிளிநொச்சியையும் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பையும் மையப்படுத்தி போராட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்தப் போராட்டத்தை வலுப்படுத்த பல்வேறு அமைப்புகளுடன் சந்திப்புகளையும், உரையாடல்களையும் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறோம். இது தொடர்பில் வடக்கின் சகல மாவட்டங்களிலும் கலந்துரையாடல்களை நடத்துகிறோம். இந்தப் போராட்டங்களுக்கு அனைவரும் பங்களிக்க வேண்டும் - என்றார். (ஐ-10)

## போக்குவரத்து...

உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், 2025ஆம் ஆண்டில் 2,700 வீதி விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. இதில் 2,700 பேர் உயிரிழந்தனர். இவர்களில் 2,000 பேர் பாதசாரிகள், மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள் மற்றும் பின்னால் அமர்ந்து பயணிதவர்களாவர். இறந்தவர்களில், 53 சதவீதமானோர் ஆண்கள்.

50 சதவீதமான விபத்துகளுக்கு சாரதிகளே காரணம். இவர்களில் பெரும்பாலானோர் மதுபானம், போதைப் பொருட்களைப் பயன்படுத்துபவர்கள். போதைப் பொருள் பயன்படுத்தும் தமது சாரதிகள் குறித்து போக்குவரத்து சங்கங்கள் அதிகளவில் தகவல்களை வெளிப்படுத்தியுள்ளன. இவர்களில் 60 சதவீதமானோர் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ளனர் - என்றார். (ஐ)

## மாற்று...

தற்போதைய அரசாங்கத்தின் அமைச்சரான லால்காந்த மேற்கொண்டு வரும் செயல்பாடுகள், பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் ஜோன் டொய்லி ஆற்றிய சூழ்ச்சிமிக்க பாத்திரத்தையே நினைவூட்டுகிறது. தேசிய மக்கள் சக்தி என்பது ஓர் அரசாங்கம் மட்டுமே தவிர அதுவே "அரசு" அல்ல. ஓர் அரசாங்கத்தை தேர்தலில் தோற்கடிக்கவோ அல்லது கலைக்கவோ முடியும். ஆனால், "அரசு" என்பது நிலையானது. அதனைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நினைப்பது சர்வாதிகாரத்தின் வெளிப்பாடு.

அமைச்சர் லால்காந்த அண்மையில் வெளியிட்ட "நாங்கள் அரசாங்கத்தை கைப்பற்றிவிட்டோம், ஆனால், இன்னும் அரசை கைப்பற்றவில்லை" என்ற கூற்று அரசியல் அறிவியலின்படி ஆபத்தான முன்னுதாரணமாகும்.

பிரான்ஸின் 14-ஆம் லூயி மன்னன் "நானே அரசு" என்று கூறியதைப் போன்றே தற்போதைய ஆட்சியாளர்களும் செயல்படுகின்றனர். அரசு என்ற எஜமானனின் சேவகனே அரசாங்கம் என்பதையும் மக்களின் விருப்பங்களை கொள்கைகளாக மாற்றுவதே அதன் பணி என்பதையும் அவர்கள் மறந்துவிட்டனர்.

மாற்றுக் கருத்துடைய அரசியல் பிரிவினரே இல்லாத ஒரு சமூகத்தை உருவாக்க அரசாங்கம் முயற்சிக்கிறது. தமது அரசியல் நிலைப்பாட்டுக்கு இணங்காத நிறுவன தலைவர்களைச் சுதந்திரமாகச் செயல்பட விடாமல் அரசாங்கம் தடுத்து வருகிறது - என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)

## கணக்காய்வாளர்...

பதவிக்காக 4 பெயர்கள் பரிந்துரைக்கப்பட்ட போதிலும், அரசமைப்பு சபை உரிய முறையில் நிறைவேற்றாதமையால் இதுவரை கணக்காய்வாளர் நாயகம் பதவி வெற்றிடமாகவே உள்ளது - என்றார். (ஐ)

## சங்கானை...

கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரிவித்தவை வருமாறு, சுழிபுரத்தில் 30 வருடமாக நிலை கொண்டிருந்த இராணுவ முகாம் அகற்றப்பட்டு அந்த காணிக்கு உரியவர்களான பனை - தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கத்தினரிடம் ஒப்படைத்துள்ளோம்.

சங்கானை கிழக்கு பகுதியிலும் ஓர் இராணுவ முகாம் அமைந்திருக்கிறது. அது தனியாரின் காணி. அந்தக் காணியையும் பொதுமக்களிடம் கையளிக்குமாறு நாங்கள் இராணுவத்திடம் கோரியுள்ளோம். அவர்கள் அதனை சாதகமாக பரிசீலிப்பதாக கூறினார்கள் - என்றார். (ஐ-05)

## டித்வா...

திட்டத்தில்" குறிப்பிடப்பட்டுள்ள வர்த்தக சேதங்களுக்கான கொடுப்பனவு வழங்கும் திட்டத்தை மிகவும் வினைத்திறனாகவும் பயனுள்ள முறையிலும் நடைமுறைப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் மற்றும் விளக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன.

2025 நவம்பர் 21 முதல் 2025 டிசெம்பர் 31 வரை நிலவிய பேரிடர் நிலைமையின் போது ஏற்பட்ட வர்த்தக சேதங்கள் இதற்கு பொருந்தும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## தையிட்டி...

7 மணி முதல் மாலை 6 மணி வரையும் போராட்டம் நடைபெறும்.

இந்தப் போராட்டத்தில் அனைத்துத் தமிழ்க் கட்சிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் என அனைவரையும் கலந்து கொண்டு ஆதரவு வழங்குமாறு போராட்ட ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதானோருக்கு நிவாரணமில்லை!

**நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தகவல்**

கொழும்பு, ஜன. 31

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் கொண்டுவரப்பட்டாலும், நடைமுறையிலுள்ள பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களுக்கு, எந்தவித நிவாரணமும் வழங்கப்படாது என்று நீதி அமைச்சு அறிவித்துள்ளது.



எனினும், நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்து, இதுவரை வழக்கு தாக்கல் செய்யப்படாதவர்களின் தகவல்கள் இருந்தால், அது குறித்து ஆராய்வதாகவும் நீதி அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார தெரிவித்துள்ளார்.

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் குறித்து பொதுமக்கள், அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகள் என பலதரப்பட்ட தரப்புகளும் தங்களுடைய கருத்துகள் மற்றும் யோசனைகளை முன்வைத்து வருகின்றனர்.

இந்த நிலையில், எதிர்வரும் பெப்ரவரி 28 ஆம் திகதி வரை இதற்கான கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும் நீதி அமைச்சர் குறிப்பிட்டார்.

அதற்கு பின்னர், சட்டவரைவுக் குழுவை கூட்டி, அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

## திருமதி அழகிப் போட்டியில் இலங்கைக்கு மூன்றாம் இடம்

கொழும்பு, ஜன. 31



அமெரிக்காவில் நடைபெற்ற 41ஆவது உலகத் திருமதி அழகிப் போட்டியில் தாய்லாந்துப் போட்டியாளர் மகுடம் சூடியுள்ளார். இப்போட்டி இலங்கை நேரப்படி நேற்று காலை நிறைவடைந்தது. இதில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்திப் கலந்துகொண்ட சபீனா யூசுப், இறுதிச் சுற்றின் முதல் மூன்று இடங்களுக்குள் தெரிவானதுடன், அவருக்கு மூன்றாம் இடம் கிடைத்தது.

போட்டியை நடத்திய நாடான அமெரிக்காவின் போட்டியாளர் இரண்டாம் இடத்தைப் பிடித்தார். இப்போட்டியில் உலகின் 60 இற்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த அழகிகள் கலந்துகொண்டனர். (அ)

## ரூபா 30 மில்லியன் பணமோசடி; தொழிலதிபர் விளக்கமறியலில்

**கெஹலிய விவகாரத்தில் அதிரடி**

கொழும்பு, ஜன. 31

முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிரான பணமோசடி விசாரணைத் தொடர்பில், கைது செய்யப்பட்ட தொழிலதிபர் ஒருவரை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, தனது பதவிக் காலத்தில் சட்டவிரோத நடவடிக்கைகளின் மூலம் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சுமார் ரூ. 748 மில்லியன் பணத்தை ஈட்டியதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்தப் பணத்தைச் சலவை செய்த விவகாரம் குறித்து இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகிறது.

இந்த பாரிய பணமோசடி வலையமைப்பில் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் குறித்த தொழிலதிபர் கைது செய்யப்பட்டார்.

தனக்குச் சொந்தமில்லாத ரூ. 30 மில்லியன் பணத்தை, அது சட்டவிரோதமானது என்று தெரிந்தே தனது வசம் வைத்திருந்ததாக அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் முன்வைக்கப்பட்ட ஆதாரங்களை ஆராய்ந்த நீதிவான், சந்தேகநபரை பெப்ரவரி 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (அ)

## கடலில் மூழ்கி ஒருவர் மாயம்!

கொழும்பு, ஜன. 31

காலி - ஹபராதுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொக்கல கடலில் நீராடச்சென்ற இளைஞன் ஒருவர் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளனர்.

நேற்று முன் தினம் வியாழக்கிழமை மாலை இந்த சம்பவம் பதிவாகியுள்ளது. 3 பேர் நீரில் மூழ்கியதில், சம்பவ இடத்தில் இருந்தவர்கள் இருவரை மீட்டுள்ளதுடன் ஒருவர் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளார்.

காணாமல்போனவர் கராடுவ, கம்புறுகமுவ பகுதியைச் சேர்ந்த 20 வயதுடையவர் என தெரிவிக்கப்படுகிறது.

கம்புறுகமுவ பகுதியைச் சேர்ந்த சுமார் 40 பேர் கொண்ட குழு ஒன்று சுற்றுலாவுக்காக குறித்த பகுதிக்கு வந்து கடலில் நீராடிக்கொண்டிருந்தபோது இந்த சம்பவம் நேர்ந்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

## பெண்கள் ஆணைக்குழு முடக்கம்; ஹர்ஷ டி சில்வா கடும் விமர்சனம்

கொழும்பு, ஜன. 31

இலங்கையில் புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட தேசிய பெண்கள் ஆணைக்குழுவுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படாமை மற்றும் அதன் தலைவரின் இராஜினாமா குறித்து எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா அரசாங்கத்தைக் கடுமையாக விமர்சித்துள்ளார்.

நிதி ஒதுக்கீடு இல்லாத ஆணைக்குழு பெண் பிரதமர் மற்றும் அதிக எண்ணிக்கையிலான பெண் பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டுள்ளபோதிலும், இந்த ஆணைக் குழுவுக்கு வரவு-செலவுத் திட்டத்தில் பூச்சிய நிதி ஒதுக்கப்பட்டிருப்பது குறித்து கடந்த வாரம் பொது நிதி பற்றிய குழுவில் தான் கேள்வி எழுப்பியதாக அவர் சுட்டிக்காட்டினார்.

தலைவரின் இராஜினாமா மற்றும் பின்னணி நிதி வசதிகள், அலுவலக வசதிகள் மற்றும் பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் ஆணைக்குழுவைச் செயற்படுத்த முடியாது எனத் தெரிவித்து, அதன் முதலாவது தலைவரான கலாநிதி ரமணி ஜெயசுந்தர தனது பதவியை இராஜினாமா செய்துள்ளதாக தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

பிரதமர் சர்வதேச ரீதியாகப் பெண்களின் உரிமைகள் குறித்து உரையாற்றுகிறார், ஆனால் இலங்கையில் அந்தப் பேச்சுக்கள் நடைமுறை ரீதியான நிதி மற்றும் ஆதரவின்றி அர்த்தமற்றுப் போகின்றன என அவர் விமர்சித்துள்ளார்.

2024 ஆம் ஆண்டின் பெண்களை வலுப்படுத்தும் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட இந்தச் சுதந்திரமான நிறுவனம், நிதிப் பற்றாக்குறையால் முடங்கிக் காணப்படுவதை ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டினார். (அ)

திருமலை புத்தர் சிலை விவகாரம்

# தேரர்களின் ரிட் மனு மீதான தீர்ப்பு அடுத்த மாதம் வரை ஒத்திவைப்பு

கொழும்பு, ஜன. 31

திருகோணமலை புத்தர் சிலை விவகாரம் தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பலங்கொட கஸ்ஸப தேரர் மற்றும் கல்யாணவங்ச திஸ்ஸ தேரர் ஆகியோரை விளக்கமறியலில் வைக்க பிறப்பிக்கப்பட்ட உத்தரவை ரத்து செய்யக்கோரி தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு மீதான தீர்ப்பு எதிர்வரும் பெப்ரவரி 03 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் நீதியரசர் ரோஹந்த அபேசூரிய மற்றும் பிரியந்த பெர்ணான்டோ ஆகியோரைக் கொண்ட நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இந்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

நேற்று குறித்த தீர்ப்பு அறிவிக்கப்படவிருந்தபோதிலும், தீர்ப்புரை இன்னும் முழுமையாகத் தயாராகவில்லை என மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் அறிவித்தார்.

இதற்கமைய, தீர்ப்பு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 03 ஆம் திகதி அறிவிக்கப்படும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

எவ்வாறாயினும், அதற்கு முன்னதாக தீர்ப்பு தயாராகும் பட்சத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை (பெப்ரவரி 02) அதனை அறிவிக்க நடவடிக்கை எடுப்பதாக நீதியரசர் தெரிவித்தார்.

திருகோணமலையில் புத்தர் சிலை ஒன்றை நிறுவியது தொடர்பான சர்ச்சையையடுத்து, பொது அமைதிக்குக் குந்தகம் விளைவித்த குற்றச்சாட்டில் இந்தத் தேரர்கள் இருவரும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## காணாமல்போயிருந்த மீனவர் சடலமாக மீட்பு

மட்டக்களப்பு, ஜன. 31

மட்டக்களப்பு களுவன்கேணி கடற்பரப்பில் தோணி கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் காணாமல் போயிருந்த 21 வயதுடைய இளம் மீனவர் நேற்று காலை சடலமாக மீட்கப்பட்டார்.

சடலமாக மீட்கப்பட்டவர் களுவன்கேணி, வோட்வாடி வீதியைச் சேர்ந்த 21 வயதுடைய வடிவேல் வினோதன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இரண்டு நாட்களுக்கு முன்னர் களுவன்கேணி கடலில் மீன்பிடிக்கச் சென்றபோது, எதிர்பாராத விதமாக தோணி கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இவ்விபத்தின் போது தோணியிலிருந்த இளம் மீனவர் கடலில் மூழ்கி காணாமல் போனார்.

அவரைத் தேடும் பணிகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில், இன்று காலை களுவன்கேணி கடற்கரையோரத்தில் அவரது சடலம் கரை ஒதுங்கியுள்ளது.

## இனப்பிரச்னைக்கு சுயநிர்ணய உரிமை அடிப்படையில் தீர்வு காணல் அவசியம்!

**ஐக்கிய சோசலிசக் கட்சி வலியுறுத்து**

கொழும்பு, ஜன. 31

தேசிய இனப்பிரச்னைக்கு சுயநிர்ணய உரிமைகளின் அடிப்படையில் தீர்வு காணப்பட வேண்டும் என்று ஐக்கிய சோசலிசக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் விசேட கூட்டமொன்றை அக்கட்சி எதிர்வரும் 13 ஆம் திகதி யாழ். நல்லூரில் நடத்துகின்றது.

கட்சித் தலைவரான சிறிதுங்க ஜயசூரிய சிறப்பு பேச்சாளராக பங்கேற்று, தமிழ் மக்களுக்கு கௌரவமானதொரு தீர்வை வழங்குமாறு வலியுறுத்தவுள்ளார்.

மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும், வடக்கு மீன சமூகத்தின் பிரச்னைகள் உடன் தீர்க்கப்பட வேண்டும் எனவும் இதன்போது வலியுறுத்தப்படவுள்ளது. (அ)

## ஐக்கிய மக்கள் சக்தி மாநாட்டுக்கு முன் ரணில்-சஜித் நேரடி சந்திப்புக்கு ஏற்பாடு

கொழும்பு, ஜன. 31

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோருக்கிடையிலான சந்திப்பு விரைவில் இடம்பெறவுள்ளது உறுதியாகியுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி உதயமாகி எதிர்வரும் 10 ஆம் திகதியுடன் ஆறாண்டுகள் ஆகின்றன.

அதற்கு முன்னதாக இருவரும் நேரடி சந்திப்பில் ஈடுபடுவார்கள் என தெரியவருகின்றது.

இதன்போது எட்டப்படும் முடிவுகளின் அடிப்படையில் ஐக்கிய மக்கள் சக்தியின் கட்சி மாநாட்டில் தீர்மானங்கள் நிறைவேற்றப்படலாம் எனவும் அறியமுடிகின்றது.

இரு கட்சிகளும் இணைவுக்கு இணங்கி இருந்தாலும் தனிக்கட்சியா, கூட்டணியா என்பது பற்றி இன்னும் இறுதி முடிவெடுக்கப்படவில்லை.

எனவே, ரணில் மற்றும் சஜித்துக்கிடையிலான சந்திப்பே அடுத்த கட்டத்தை நிர்ணயிக்கும் என கட்சி உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 31.01.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.